lebensfreu(n)de

jungwacht
blauring

# informationen

tamilisch



# Jungwacht Blauring...

... எனப்படும் இந்தக் கத்தோலிக்க சிறுவர்-இளைஞர்கழகமானது, சுவிற்சர்லாந்தில் டொய்ச்மொழி பேசப்படும் பிரதேசத்தில் 31‘000 அங்கத்தவர்களைக் கொண்டது. இந்த Jungwacht Blauring கழகத்தில், சிறுவர்-சிறுமியரும், இளைஞர்-யுவதிகளும் தம்மை இணைத்துக் கொள்ளலாம். இக் கழகம் புதியவற்றை அனுபவிக்கவும், ஒருவர் தனது சுய ஆற்றலைக் கண்டுகொள்ளவும், தனது பன்முகப்பட்ட நடவடிக்கை வாய்ப்புகளுக்கூடாக அழைப்பு விடுக்கின்றது.
Jungwacht Blauring கத்தோலிக்க தேவாலயத்துடன் கட்டுப்பட்டிருந்தாலும் கூட, இதன் கதவு மத, கலாச்சாரக் கட்டுப்பாடின்றி, அனைத்துச் சிறுவர்-சிறுமிகளுக்கும், இளைஞர்-யுவதிகளுக்குமாகத் திறந்திருக்கின்றது.

ஏறக்குறைய 15‘000 பெண்பிள்ளைகளும் 10‘000 ஆண்பிள்ளைகளும் கௌரவப்பதவி வகிக்கின்ற 7‘000 இளைஞர், யுவதிகளினால் குருபீடத்தரப்பில் பராமரிக்கப்படுகின்றார்கள். பெண்கள் Blauring இலும், ஆண்கள் Jungwacht இலும் இணைந்து செயற்படலாம். சில குருபீடங்களில் Blauring உம் Jungwacht உம் Jubla என்றிணைந்து இருபாலாரும் இணைந்த குழுவாகச் சேர்ந்தும் செயற்படுகின்றனர்.

இந்த Jungwacht Blauring இல் ஒரே வயதுடைய சிறுவர்-சிறுமியர் ஒரு குழுவாக இருப்பர். ஒரு குருபீடத்திலுள்ள இவ்வாறான ஒரே வயதுடைய குழுக்களெல்லாம் சேர்ந்து சிறுவர்கூட்டத்தை(Schar)க் கட்டியெழுப்புவர். சிறுவர்கூட்டத்தி(Schar)ன் தலைமைத்துவமும் மிகுதியான தலைவர்குழுவும் வருடம் முழுவதற்குமான போதியளவான நடவடிக்கைகளை உள்ளடக்கிய, இணைந்த சிறுவர்கூட்ட(Schar)வாழ்க்கையைத் திட்டமிட்டு இணைப்பார்கள்.

Jungwacht Blauring இலுள்ள அங்கத்தவர்கள் கீழ்வரும் கோட்பாடுகளின் கீழ் வாழ்வர்:

ஒன்றாக இருத்தல்
இணைந்து தீர்மானித்தல்
சமய நம்பிக்கையுடன் வாழ்தல்
உருவாக்கத்தக்கவராக இருத்தல்
இயற்கையை அனுபவித்தல்

பிள்ளைகளும் இளைஞரும் தம்மை வெளிப்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குமான ஒரு சுதந்திரமான தளத்தை ...

பொறுப்புணர்வை ஊக்கிவிப்பதுடன் வாழ்க்கையனுபவத்தை அறியும் வாய்ப்பை, ஒரு பிரயோசனமான பொழுதுபோக்கு நடவடிக்கையூடாக ...

பிள்ளைகளாலும் இளைஞர்களாலும் தீர்மானிக்கப்பட்டு, செயற்படுத்தப்படும் ஒரு பன்முகப்பட்ட நடவடிக்கை வாய்ப்பை ...

சமயமும் சடங்குகளும் ஒரு முக்கிய பங்கை வகிக்கும் ஒரு சமூகத்தை ...

பிள்ளைகளும் இளைஞரும் சுய ஆற்றலை, ஆற்றல் வெளிப்பாட்டு அழுத்தம் இல்லாமல் கண்டுகொள்ளவும் அனுபவிப்பதற்குமான ஓரிடத்தை ...

பிள்ளைகளும் இளைஞரும் தமது தன்னம்பிக்கையைப் பலப்படுத்தும் ஓரிடத்தை ...

வாழ்க்கையில் இன்பத்தையும் நண்பர்களையும் ...

# ... நாம் வழங்குகின்றோம்.

# குழு நேரம்...

... எனப்படுவது, சிறுவர்கூட்டத்தி(Schar)லுள்ள தனித்தனியான சிறுவர் குழுக்கள் சந்திக்கும் நேரமாகும். எப்போதும் ஏறக்குறைய ஒரே வயதுடைய ஆறு தொடக்கம் இருபது சிறுமிகள் அல்லது சிறுவர்கள் பங்கேற்பர். எந்தச் சிறுவர்கூட்டம்(Schar)என்பதைப் பொறுத்து இந்தச் சந்திப்பு, ஒவ்வொரு வாரமும், இரண்டு வாரத்துக்கு ஒரு முறை அல்லது மாதமொருமுறை வேறுபட்ட கிழமைநாட்களில் நடைபெறும்.

ஒவ்வொரு சிறுவர்குழுவும் ஒன்று தொடக்கம் மூன்று தலைமை தாங்கும் வாலிபர்களால் பராமரிக்கப்படும். அவர்களது பொறுப்பு மிக்க பணியினை இலக்காகக் கொண்டு பயிற்றப்பட்ட இவ்விளைஞர்கள், அநேகமான நேரங்களில் தமது குழுவிலுள்ள பிள்ளைகளின் நெருங்கிய தொடர்பாளர்களாகவும் அவர்களுக்கு முன்மாதிரியாகவும் இருப்பார்கள்.
தலைமை தாங்குபவர்கள் ஒன்றுகூடும் இந்தக் குழுநேரத்தை வெவ்வேறுபட்ட வழிகளில் ஒழுங்குபடுத்தி வழி நடாத்துவார்கள்: படைப்பாக்கம் நிறைந்ததாக, விளையாட்டுக்களாக, ஒருவரோடு ஒருவர் அலசியாராய்வதாக, இயற்கையைக் கண்டறிவதாக, பயணங்களை அனுபவிப்பதாக, நாடகம் நடிப்பதாக, பாடுவதாக, நடனமாடுவதாக, கைவேலை செய்வதாக, சமைப்பதாக இது போன்ற பல. இவையெல்லாம் பிள்ளைகளுக்கு, அவர்கள் விரும்பி அனுபவிக்கும் வெவ்வேறுபட்ட பொழுதுபோக்கு நேரங்களாக அமையும்.

# சிறுவர்கூட்ட(Schar) நிகழ்வுகள் ...

... என்பவை, ஒரு சிறுவர்கூட்டத்தி(Schar)ல் உள்ள அனைத்துச் சிறுவர்குழுக்களும் அதனைத் தலைமை தாங்கி நடத்துபவர்களும் சந்திக்கும் ஒரு நிகழ்வாகும். மிக வயது குறைந்த அங்கத்தவரிலிருந்து வயதில் மூத்த அங்கத்தவர் ஈறாக அனைவரும் வெவ்வேறு நடவடிக்கைகளில் சிறுவர்கூட்ட(Schar) நிகழ்வில் சந்திப்பர். இந்த நிகழ்வில் எத்தனை முறை சந்திப்பது என்பதும் சில சிறுவர்கூட்டங்(Schar)களிலும் தங்கியுள்ளது. இந்த நிகழ்வுகளில் பிள்ளைகள் பங்குபற்றுவது அநேகமாக விண்ணப்பத்தினூடாக ஒழுங்குபடுத்தப்படுவதனால், பிள்ளைகள் நேரத்துக்கேற்றவாறும் ஆர்வத்துக்கேற்றவாறும் இணைந்து பங்குபற்றலாம்.

இந்தச் சிறுவர்கூட்ட(Schar)நிகழ்வுகளின் நிகழ்ச்சிநிரல்களை நேரகாலத்துக்குப் பெற்றோரும் பிள்ளைகளும் அறிந்துகொள்ளும் பொருட்டு, தலைமை தாங்கும் குழுக்களால், ஒரு வருட நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்படும். பருவகாலத்துக்கேற்றவாறு இந்த வாய்ப்புக்கள் பலதரப்பட்டவையாக இருக்கும்: குளிர்காலத்தில் பனிச்சறுக்கு விளையாட்டு, Fasnacht கேளிக்கைகள்; வெப்பமான மாதங்களில் விளையாட்டுச்சுற்றுப்போட்டி, பிரதேசவிளையாட்டு, அன்னையர்தினஇறைவணக்கம், வார இறுதி நாட்களில் கூடாரங்களில் தங்கியிருத்தல், திறந்தவெளியரங்கு சினிமா, முகாம்களில் தங்கியிருந்தகால மீள்பார்வை, உணவுகளை நெருப்பில் வாட்டி உண்ணுதல்; வருட இறுதியில் Halloween கேளிக்கை, காட்டுக்குள் நத்தார் பண்டிகை போன்றவை.

# முகாம் ...

... Jungwacht Blauring இன் ஒவ்வொரு வருடத்தினதும் அதியுச்ச நிகழ்வாகும். மூட்டை முடிச்சுகளுடன் சிறுவர்கூட்டத்தி(Schar)ல் உள்ள அனைவரும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு கோடைகால-, இலையுதிர்கால- அல்லது குளிர்கால முகாம்களுக்குப் பயணிப்பார்கள். ஒரு குழுவீட்டில் அல்லது முகாம்கள் அமைக்கக் கூடிய இடங்களில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் இரவைக் கழிப்பார்கள்.

விளையாட்டுக்களும் உடற்பயிற்சிகளும், படைப்பாக்கம் நிறைந்த கைப்பணிகளும், முகாமுக்கு முன்பாகத் தீ மூட்டி அதற்கு முன்னாலிருந்து பாடுதலும், ஆனந்தமான நேரங்களும், இன்பமான நாட்களும், காடுகளுக்குள் நடத்தலும், அப்பிரதேசங்களில் விளையாடுதலும் என முகாம் வாழ்க்கைக்குரிய அன்றாட நடவடிக்கைகளுடன் கழியும் இந்த நாட்கள், நீண்ட காலம் பசுமையான நினைவுகளாக மனதில் நிலைத்திருக்கும். இந்த முகாம் வாழ்க்கை இன்னும் புதிர்நிறைந்ததாக இருப்பதற்காக தலைமைதாங்கி நடாத்துபவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஒரு தனிப்பட்ட தலைப்புகளின் கீழ் நடாத்துவார்கள். அதனால் விடுமுறைக்காலத்தில் கடற்கொள்ளைக்காரர்கள் புகையிரதத்துக்காகக் காத்திருக்கும் காட்சிகளும் அல்லது வேறு உலகைச் சேர்ந்தவர்கள் முகாமுக்கு முன் வளர்த்திருக்கும் தீயின் முன் இருக்கும் காட்சிகளும் அல்லது செவ்விந்தியர்கள் நகரின் நடுவே புதையல் தேடும் காட்சிகளும் ஆச்சரியப்படத் தேவையில்லாதவையாகின்றன.

Blauring-, Jungwacht- உடன் Jubla முகாம்கள் அநேகமான சிறுவர்கூட்டங்(Schar)களால் இளைஞர் +விளையாட்டு வாய்ப்புக்களாக, விளையாட்டுப்பாடத்தில் முகாம்விளையாட்டுப்பயிற்சி/ நீண்டநேர பயணமாக ஒழுங்குபடுத்தப்படும். இந்த முகாம் நிகழ்ச்சிநிரல் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இளைஞர் + விளையாட்டுப்பயிற்சிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருக்கும். அதற்காக இந்த சிறுவர்கூட்டம்(Schar) நிதி உதவிகள், முகாம்களை அமைப்பதற்கான உதவிப்பொருட்கள், கற்றல் வாய்ப்புக்கள், கடனாகப் பெறக்கூடிய பொருட்கள் என்பவற்றைப் பெறுவார்கள். இந்தச் சேவைகளும் பெரிய பங்களிப்புக்களும், ஒவ்வொரு முகாமிலும் தலைமைதாங்கும்குழு வெற்றி பெற உதவுகின்றது!

# தலைமைதாங்கும் குழுவானது ...

... ஏறக்குறைய 16 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட ஆண்-பெண் இருபாலாரையும் கொண்டது. இக்குழுவானது அனைத்து Jungwacht Blauring நடவடிக்கைகளிலும் பொறுப்பைத் தாங்கி பெறுமதி மிக்க பாதுகாப்புப் பணியாற்றுகின்றது. அதனால் சிறுவர்- இளைஞர் இரண்டு கழகங்களும் தலைமைதாங்குபவர்களின் பெறுமதி மிக்க, நீண்ட காலத்துக்கு நிலைக்கக் கூடிய, நன்கு உருவாக்கப்பட்ட கற்கைநெறிகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. இளைஞர்+விளையாட்டுப்பயிற்சியின் இணைந்த வேலைக்கு, Jungwacht Blauring மாநில ரீதிலும், சுவிஸ்ஸாவிய ரீதியிலும் மேலதிகக் கற்கைநெறிகளை நடாத்துகின்றது. வெவ்வேறுபட்ட வயதுக்குழுக்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கான இக்கற்கைநெறியானது, அவர்களுக்குப் பிரயோசனமான சிறுவர்-இளைஞர் பணிக்கான அடிப்படை அறிவை வழங்குகின்றது.

ஒவ்வொரு தலைமைக்குழுவும் Jungwacht Blauring கட்டமைப்பின் ஒரு பகுதியாதலால், வேறுபட்ட பக்கங்களிலிருந்து உதவியைப் பெறுகின்றது. ஒவ்வொரு சிறுவர்கூட்டமும்(Schar) ஒரு பயிற்சியாளராலும் அநேகமாக ஒரு தலைவரினாலும் வழிநடாத்தப்படும். பலதரப்பட்ட வாழ்க்கையனுபவங்களையும் குறிக்கப்பட்ட கற்றல்நெறிகளையும் பயின்ற மனிதர்கள், இளைய தலைமைக்குழுவினருக்கு அடிக்கடி ஓர் ஆதரவாக இருப்பர். அடுத்த பக்கம் மாநிலக்கழகத்தில் சிறுவர்கூட்டம்(Schar) அங்கத்துவம் வகிப்பதனால், மாநிலத்தலைமைத்துவத்தினால் கௌரவத்துக்குரிய கண்காணிப்பாக கற்கைநெறி வாய்ப்புக்கள், உதவிப்பொருட்கள், ஆலோசனைகள் போன்ற இலாபத்தையும் பெற்றுக்கொள்கின்றது.

அவர்களது களைப்பற்ற சேவை காரணமாக – Jungwacht Blauring தலைமைக்குழுவானது, வருடாவருடம் 3‘000‘000 மணித்தியாலங்களைப் பொதுப்பணிக்கு அற்பணிக்கின்றது!- இதன் மூலம், 32‘000 சிறுவர்-சிறுமிகளுக்கும் இளைஞர்-யுவதிகளுக்கும் நிறைவான, மறக்க முடியாத நேரங்களையும் அனுபவங்களையும் தர முடிகின்றது.

# Jungwacht Blauring இல் இணைந்துகொள்ள ஆர்வமாக இருக்கின்றதா?

தொடர்புகளுக்கு:

மேலதிக தகவல்களுக்கு:

Bundesleitung Jungwacht Blauring
St. Karliquai 12
6004 Luzern

041 419 47 47
info@jubla.ch
www.jubla.ch